03125
8904/18

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப.,

ந.க.பஅ3/4834/2016 நாள்:13.08.2018

பொருள் பணியமைப்பு - வேலூர் மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி செயலர்களாக பணிபுரிபவர்கள் - 2016-2017-ஆம் ஆண்டு 20% இட ஒதுக்கீடு - பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர் ஆக பதவி உயர்வு வழங்கி ஆணையிடுவது - சார்பு.

தெள்ளி ஊராட்சி ஒன்றியம் 18 JUL 2018 வேலூர் மாவட்டம்

பார்வை:
1. வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் எண் ந.க.பஅ3/4834/2016 நாள்: 02.06.2017
2. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் மேற்குறிப்பு எண்.53654/2017/பி3 நாள்: .07.2018
3. அரசு கடிதம்(2ப) எண்:85, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்:13.07.2018
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.5956/சிடி-பி2/2017 நாள்:25.06.2018

-----

ஆணை:

வேலூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் ஊராட்சி செயலர்களாக பணிபுரிபவர்களுக்கு 2016-2017-ஆம் ஆண்டு 20% இட ஒதுக்கீட்டில் பத்து (10) பணியாளர்களுக்கு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்க 1954 ஆம் ஆண்டு தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளின், ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் தேர்வாணையம் தனது இசைவினை அளித்துள்ளதாக பார்வை-3ல் காணும் அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசுப் பணியாளர் தேர்வாணையம் இசைவு அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பின்வரும் பத்து (10) ஊராட்சி செயலர்களுக்கு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு, **Pay Matrix Level 8/1 Rs.19,500/-** (19,500-62,000) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் கீழ்கண்டவாறு பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர்/ பதவி/பணிபுரியும் ஊராட்சி ஒன்றியம் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-2 ஆக பதவி உயர்வு அளிக்கப்படும் அலுவலகம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | க.ஞானசேகர்,<br>ஊராட்சி செயலர்,<br>நாட்றம்பள்ளி.<br>(பிறந்த தேதி:22.06.1972) | ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், சோலையார்பேட்டை.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 2. | சி.பழனி<br>ஊராட்சி செயலர்<br>நாட்றம்பள்ளி.<br>(பிறந்த தேதி:03.06.1973) | ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், மாதனூர்.<br>(காலிப்பணியிடத்தில்) |

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| 3. | ஜெ.நீலகண்டன்<br>ஊராட்சி செயலர்,<br>நெமிலி.<br>(பிறந்த தேதி:21.05.1972) | ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், அரக்கோணம்.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 4. | டி.எம்.சண்முகம்<br>ஊராட்சி செயலர்,<br>நாட்றம்பள்ளி<br>(பிறந்த தேதி:03.05.1976) | ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், மாதனூர்.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 5. | பி.மேனகா<br>ஊராட்சி செயலர்,<br>நாட்றம்பள்ளி.<br>(பிறந்த தேதி:15.06.1972) | இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், ஆலங்காயம்.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 6. | ஆர்.தேவேந்திரன்<br>ஊராட்சி செயலர்,<br>கந்திலி.<br>(பிறந்த தேதி:03.07.1977) | ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், சோளிங்கர்பேட்டை.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 7. | டி.முனுசாமி<br>ஊராட்சி செயலர்,<br>அரக்கோணம்.<br>(பிறந்த தேதி:01.06.1976) | ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், நெமிலி.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 8. | எஸ்.சபாஸ்டின்<br>ஊராட்சி செயலர்,<br>கீ.வ.குப்பம்.<br>(பிறந்த தேதி:20.05.1972) | இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், பேர்ணாம்பட்டு.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 9. | பி.நிர்மலா<br>ஊராட்சி செயலர்,<br>பேர்ணாம்பட்டு.<br>(பிறந்த தேதி:10.06.1969) | இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், குடியாத்தம்.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 10. | எ.ரவி<br>ஊராட்சி செயலர்,<br>கந்திலி.<br>(பிறந்த தேதி:09.08.1969) | இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம், நாட்றம்பள்ளி.<br>(காலிப்பணியிடத்தில்) |

மேற்படி இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டவர்களின் பணிமூப்பு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணியமர்த்தப்பட்ட நாள் முதல் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளதால், அவ்வாறே பணிமூப்பு நிர்ணயம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. இளநிலை உதவியாளராகப் பணியமர்வு செய்யப்பட்ட பணியாளருக்கு இவர் பணியில் சேர்ந்த தேதி முதல் Pay matrix Level 8-ன்படி ரூ.19500-62000 (Old Pay Band PB1/Rs.5200-20200+2400GP) ஊதியம் மற்றும் இதரப்படிகள் வழங்கப்படும்,
2. இப்பணி நியமன ஆணை கிடைக்கப்பெற்ற உடன் சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் இவர் பணியில் சேர வேண்டும்.

3. பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டு காலத்திற்குள் இரண்டாண்டு தகுதிகாண் பருவ பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும்.

4. தகுதிகாண் பருவகாலத்திற்குள் தற்போது நடைமுறையில் உள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான அனைத்து துறைத் தேர்வுகளிலும் தேர்ச்சிப் பெற வேண்டும் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியும் தேர்ச்சி பெற வேண்டும்.

5. அரசாணை நிலை எண்.430, நிதி துறை நாள்: 06.08.2004-ன்படி, இவர் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய (Contributory Pension Scheme) திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்.

மேலும் இப்பணி நியமனம் நிலுவையிலுள்ள அனைத்து வழக்குகளின் பேரிலான முடிவான தீர்ப்புகள் மற்றும் அதற்கேற்ப தேர்வாணையம் (மற்றும்) அரசிடமிருந்து ஏதேனும் மாறுதலான உத்தரவுகள் எதிர்காலத்தில் வரப்பெறின், இவர்கள் உடனடியாக முன்னறிவிப்பின்றி ஊராட்சி செயலர்களாக பணியிறக்கம் செய்யப்படுவார்கள் எனவும், அவ்வாறு நேரிட்டால் இந்நியமனத்தைக் கொண்டு பின்னர் எவ்வித உரிமையும் கோரக்கூடாதெனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பதவி உயர்வு தொடர்பாக தனியர்களின் பணிப்பதிவேட்டில் தேர்வாணையம் மற்றும் அரசு கடிதங்களை மேற்கோளிட்டு தகுந்த பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

பணிமாறுதல் மூலம் பதவி உயர்வு பெற்றுள்ள மேற்படி பணியாளர்கள் புதியதாக பணிநியமனம் செய்யப்பட்ட பணியிடத்தில் பணியில் சேர அவர்களை பணியிலிருந்து உடன் விடுவித்து, அவர்கள் பணியில் சேர்ந்த அறிக்கையினை உடன் இவ்வலுவலகம் அனுப்பவைக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
வேலூர் மாவட்டம்.

பெறுதல் :

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் - (உரிய அலுவலர்கள் மூலமாக)

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ)/(கிஊ), சோலையார்பேட்டை/மாதனூர்/ அரக்கோணம்/ஆலங்காயம்/நெமிலி/பேர்ணாம்பட்டு/குடியாத்தம்/நாட்றம்பள்ளி
நகல் : அரசு கூடுதல் தலைமை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை.9
நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை.3
நகல் : இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.
நகல் : இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர்-9.
நகல் : உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), வேலூர்/திருப்பத்தூர்.
நகல் : உதவி இயக்குநர்(தணிக்கை), வேலூர்/திருப்பத்தூர்.
நகல் :"பிசி1" மற்றும் "பஅ5"

Scanned with CamScanner